# ஆளுங்கட்சியின் குற்றச்செயல்களை அடுக்கடுக்காகப் பட்டியலிட்ட எதிர்க்கட்சித் தலைவர்!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதை, `கௌரவக் கொலை'களாக மாற்றினார்கள். இப்போது சமீபத்தில், அவற்றையெல்லாம் `காதல் மரணங்கள்' என்று பத்திரிகையாளர்கள் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

**தொடர்கதையாகி வரும் ஆளும் கட்சியினரின் குற்றங்கள்!**

கடந்த 2 வருடங்களாக சட்டம்ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு அரசை குறை சொன்ன கட்சி, ஆட்சிக்கு வந்த பிறகு, இப்போது என்ன சொல்கிறார்கள்? `தனி நபர் ஒழுக்கம்'தான் காரணம் என்று மக்களுக்கு பாடம் எடுக்கிறார்கள். ஆனால், ஆளுங்கட்சியினர் தினந்தோறும் குற்றச் செயல்களில் ஈடுபடுவது, இன்று தொடர்கதை ஆகிக்கொண்டிருக்கிறது.

## தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு!

உதாரணத்துக்கு தூத்துக்குடி மாவட்டத்தில், ஒரு எம்.எல்.ஏ. பெயரைச் சொல்லி ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். ஏற்கனவே, இந்த அவையில் பதிய வைத்துள்ளேன். அந்தப் பெண் புகார் கொடுத்தும், சம்பந்தப்பட்ட ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மீது, இந்த அரசு இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

நான் பேசும்போது குறுக்கீடு இருக்கக் கூடாது என்று நீங்கள் விரும்புவதாகச் சொல்கிறீர்கள். ஆனால் இவர்கள் குறுக்கீடு செய்கிறார்கள். உணர்ச்சி என்பது எல்லோருக்கும் இருக்கிறது. உணர்ச்சி என்பது எல்லோருக்கும் பொதுவான விஷயம்தான். ஒருபக்கம் மட்டும்தான் உணர்ச்சி இருக்கும், இன்னொரு பக்கம் உணர்ச்சி இல்லாமல் இருக்காது. (குறுக்கீடுகள்)

**பெரிய பட்டியலே இருக்கிறது!**

நான் இன்று உரையாற்றுவது, காவல் துறை மீதான விவாதத்தில். நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை விவாதத்தில் பங்கேற்கவில்லை. நான் பேச்சை ஆரம்பிக்கும் போதே சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டு திங்கட்கிழமை அவர் பதிலுரை சொல்லும்போது சொல்லட்டும் என்றுதான் சொன்னேன். இப்போது தான் பட்டியலையே (லிஸ்ட்) ஆரம்பிக்கிறேன். இன்னும் நிறைய இருக்கிறது.

**தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்த இன்னொரு பெண் உறுப்பினர், ஆளுங்கட்சியின் நிர்வாகிகளான டிரைட்வர், ரூஸ்வெல்டு என இரண்டு பேர் மேல் பாலியல் வன்கொடுமைப் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கிலும் அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.**

**சென்னையில், ஆளுங்கட்சியின் ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் அவர் பெயர் வேம்புலி. ஒரு பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார். அவரை கட்சியைவிட்டு நீக்குவதாக செய்திகள் வந்தன. ஆனால், கைதான சில நாட்களிலேயே வெளியே வந்து, ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்ற ஒரு அரசு நிகழ்ச்சியிலேயே அவரும் பங்கேற்றுள்ளார்.**

**ஆளுங்கட்சியின் இராணிப்பேட்டை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் விஜய் மோகன். ஒரு பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாக பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்தார்கள். நான்கு பிரிவுகளில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்தும், இதுவரை விஜய் மோகன் அவர்களைக் கைது செய்யவில்லை, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.**

**சென்னை காசிமேட்டில், ஆளுங்கட்சியின் ஆர்.கே.நகர், 43வது வார்டு பொறுப்பாளராக இருந்த `பாம்பு' தினேஷ் 11 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது.**

**சேலத்தில், பொள்ளாச்சி சம்பவத்துக்கு இணையாக 50க்கும் அதிகமான பெண்களை ஆபாசப் படங்கள் எடுத்து மிரட்டியதாக ஆளுங்கட்சிப் பிரமுகர் மணிகண்டன் மேல் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள்.**

**திருவள்ளூர் தெற்கு மாவட்ட ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் என்கிற `குட்டி' ஆளுங்கட்சியின் ஒரு பெண் நிர்வாகிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த புகாரும் செய்திகளில் வந்திருக்கின்றன.**

**சிவகங்கையில் பெண் காவலருக்கு பாலியல் தொல்லைக் கொடுத்த ஆளுங்கட்சி நிர்வாகி மகாராஜா, ராபின், ஹரீஷ்.**

**கரூர், குளித்தலையில் திருமணமான பெண்ணுக்கு பாலியல் தொல்லைக் கொடுத்த ஆளுங்கட்சியின் ஒன்றியச் செயலாளர் பெயர் ரமேஷ்.**

**நீதியும் கிடைக்கவில்லை; முதல்வர் ஸாரியும் சொல்லவில்லை!**

**மதுரை கீழமாத்தூர் பகுதியில் 10 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிக்கு, பாலியல் தொல்லை கொடுத்த ஆளுங்கட்சி நிர்வாகி கண்ணன்.**

**இப்படி இந்த 116 நாட்களில் ஆளுங்கட்சியினர் பெண்களுக்குச் செய்த 'அட்ராசிட்டி களுக்கு ஒரு பெரிய லிஸ்டே இருக்கிறது.**

ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் இந்தக் காவல் மரணங்களுக்கு எதிராகப் பேசிய தற்போதைய முதலமைச்சர் அவர்கள், ``ஸாரி வேண்டாம், எங்களுக்கு நீதிதான் வேண்டும்'' என்று பேசினார். ஆனால், இவர்கள் ஆட்சிக்கு வந்து 116 நாட்களில் இதுவரைக்கும் எட்டு காவல் மற்றும் சிறை மரணங்கள் நடந்திருக்கின்றன. இதற்கெல்லாம் இதுவரைக்கும் நீதியும் கிடைக்கவில்லை; முதலமைச்சரிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு ஸாரியும் அவர் சொல்லவில்லை.

## முதலமைச்சரை வெளிப்படையாக விமர்சிக்கின்ற பா.ஜ.க. தலைவர்கள் மீது வழக்கு இல்லை!

எம்.ஜி.ஆர் நகர் வெங்கடேசன், தென்காசி மாவட்டத்தில் கதிரேசன், தூத்துக்குடி அருணாச்சலம், மதுரையில் பூசாரி பரமசிவம் ஆகியோர் காவல் நிலையங்களில் காவலர்களால் தாக்கப்பட்டு இன்றைக்கு உயிரிழந்திருக்கிறார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வேல்முருகன் என்கிற மாரியப்பன், காவல்துறை தாக்கிய அவமானத்தில் தீக்குளித்து இறந்து போய்விட்டார். அதேபோல காவல் நிலையத்தில் விசாரணை நடத்திய பிறகு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்ட கன்னியாகுமரி சபரிவர்மன், சேலையூர் பாலாஜி, மதுரை சிறையில் அன்வர்தீன் உள்ளிட்டோர் மரணமடைந்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவங்களில் இதுவரைக்கும் இந்த அரசு, முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்று கேட்க விரும்புகிறோம். அதை இந்த அவையின் வாயிலாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு மிக மிக மோசமான ஒரு நிலையை அடைந்திருக்கிறது. முதலமைச்சருடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய உள்துறையும், உளவுத்துறையும் மொத்தமாகச் செயலிழந்து போய்விட்டதா என்று எங்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. ஏன் கேட்கிறேன் என்றால், குற்றச் சம்பவங்களைத் தடுக்க வேண்டிய காவல்துறையினர், அரசை விமர்சனம் செய்கின்ற எதிர்க்கட்சியினர், குறிப்பாக GenZ இளைஞர்கள், அவர்களோடு கூட்டணி வைத்திருக்கக்கூடிய கூட்டணிக் கட்சியினர், பத்திரிகையாளர்கள் எல்லோரையும் கைது செய்வதில் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள்.

ஆனால், முதலமைச்சரை வெளிப்படையாக விமர்சித்துப் பேசுகின்ற பா.ஜ.க. தலைவர்கள் மீது இதுவரைக்கும் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அவர் மீது ஏன் ஒரு புகாரைக் கூட இதுவரைக்கும் கொடுக்கவில்லை? ``எங்களுக்கு வந்தால் இரத்தம், அவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னியா?'' என்று கேட்கிறோம்.

இப்படி பா.ஜ.க. அடித்தாலும், வலித்தாலும் வெளியே சொல்லக் கூடாது என்கின்ற ஆளுங்கட்சியின் இந்த அரசியல் வியூகத்தை இதுவரைக்கும் நாங்கள் யாரும் கேள்விப்பட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை.

**ஜனநாயக ரீதியான போராட்டங்கள்!**

ஜனநாயக ரீதியான போராட்டங்களை முடக்குவதிலும் இந்த அரசு மிகவும் தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறது. நீட் தேர்வுக்கு எதிராக இந்தியா முழுவதிலும் உள்ள மாணவர்கள் போராடினார்கள். சென்னை மெரினாவில், அந்தப் போராட்டத்தை நடத்த இந்த அரசு அனுமதி கொடுக்கவில்லை. மாணவர்களுக்குப் பயந்து உலகத்திலேயே கடற்கரைக்குப் பூட்டு போட்ட ஒரே அரசு இந்த அரசுதான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு பெசன்ட் நகர் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்ட நீட் ஒழிப்புப் போராளி தங்கை அனிதாவின் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கும் இந்த அரசு அனுமதி தரவில்லை. அவர்கள் அனுமதியில்லாமல்தான் அந்த நிகழ்ச்சியை நடத்தி முடித்திருக்கிறார்கள்.

சென்னை, மதுரையில் நீட்டுக்கு எதிராகப் போராடிய மாணவர்களைக் காவல்துறையினர் பெயர் அட்டை (Name badge) இல்லாமலேயே போய்த் தாக்கியிருக்கிறார்கள். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்குப் போய் நீட்டுக்கு எதிராகப் போராடிய மாணவர்களைக் கைது செய்ய முயற்சி செய்திருக்கிறார்கள்.

உயர்கல்வித் துறை சார்பாக அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதில், 'காக்ரோஜ் ஜனதா பார்ட்டி, இடதுசாரி அமைப்புகள் நடத்துகின்ற போராட்டங்களுக்கு மாணவர்களை அனுப்பக் கூடாது. அப்படி அனுப்பினால், கல்லூரி மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்கள் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டால் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அந்தச் சுற்றறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கிற இடதுசாரித் தோழர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த பிறகு, அந்தச் சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். (குறுக்கீடுகள்)

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

---

### சென்னை உயர்நீதிமன்றத்தில்

# தமிழ்மொழி வழக்காடு மொழியாகிட 2006-ஆம் ஆண்டே முயற்சி எடுத்தது தி.மு.க.!

## சட்டமன்றத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

சென்னை, செப். 5 -

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ் மொழியை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்ற தனித் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு தி.மு.க. உறுப்பினர் எஸ்.ரகுபதி பேசியதாவது:-



சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்று கடந்த திமுக ஆட்சியின் போது சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதனை ஆளுநர் மூலமாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, குடியரசு தலைவர் அதனை உச்ச நீதிமன்ற கொலீஜியத்திற்கு அனுப்பி வைத்த போது, அப்பொழுது சட்டத்திருத்தங்கள் எல்லாம் தமிழிலே மொழி பெயர்க்கப்படவில்லை, தரவுகள் எல்லாம் தமிழிலே இல்லை என்ற சில காரணங்களால் அன்றைக்கு தமிழ் மொழி வழக்காடு மொழியாக கொண்டு வருவது தடுக்கப்பட்டதே தவிர மறுக்கப்படவில்லை.

இன்று இப்பொழுது இங்கே கொண்டு வந்த தீர்மானத்திற்கு பிள்ளையார் சுழி போட்டது முதன் முதலில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய முதல்வர் அவர்கள் அறிமுக உரையிலே குறிப்பிட்டது என்பது, வழக்கு மன்றத்திலே நடக்கின்ற வழக்குஎவ்வாறு நிலுவையில் உள்ளது என்பதை சாமானியர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது போன்ற நடைமுறை வர வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதி அரசர் மாண்புமிகு ரமணா அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அப்போது முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டுமென முன் மொழிந்ததை போல தற்போதைய முதல்வர் முன் மொழிந்துள்ளார்.

எனவே எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசாக திராவிட மாடல் அரசை வழிநடத்திச் சென்றவர் முதல்வராக இருந்த திராவிட நாயகர் தளபதி அவர்கள்.

அதேபோல் உச்ச நீதிமன்ற கிளை சென்னையில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முதன் முதலில் வைத்தவரும் மு.க ஸ்டாலின் அவர்கள் தான், அதுமட்டுமல்ல தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டுமென மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியிலே பங்கேற்ற உச்ச நீதிமன்ற நீதி அரசர் சந்திர சூட் அவர்களிடம் கோரிக்கையை வைத்தார், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள், மேலும் பாரத பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியதோடு நின்று விடாமல் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி முன்னிலையிலேயே தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்று தைரியமாக கோரிக்கை வைத்தவர் தான் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதையெல்லாம் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், தற்பொழுது நீங்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தில் இந்த வரலாறு எல்லாம் இல்லை, அதனால் தான் இங்கு இதனை பதிவு செய்கிறேன், தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர முதன்முதலாக குரல் கொடுத்தது திராவிட இயக்கம், திராவிட மாடல் ஆட்சி என்பதை இங்கே கவனத்தில் கொண்டு வருகிறேன்.

ஏனென்றால் மக்கள் தற்பொழுது நேரலையில் இதனை எல்லாம் பார்க்கிறார்கள், அவர்களுக்கு இந்த வரலாறு எல்லாம் தெரிய வேண்டும், தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர 2006 ஆம் ஆண்டிலிருந்து இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தனித் தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம்!

ஏனென்றால் இது எங்களுடைய குழந்தை, இதனை வரவேற்பதில் எந்த தவறும் கிடையாது, எங்களுடைய தாய்மொழி தமிழ், அன்னை தமிழ் மொழி எங்கும் ஒலிக்க வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கமும், அதற்காகத்தான் நாங்கள் சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம், தற்பொழுது மூன்றாவது முறையாக நீங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புகிறீர்கள், இது தமிழ்நாட்டு மக்களின் கனவு, நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் தமிழ் மொழி வழக்காடு மொழியாக வந்து விட்டால் சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ள முடியும், இதில் யாருக்கும் மாற்று கருத்து கிடையாது, எனவே தான் சொல்கிறேன் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதன் தொடர்ச்சியாக தமிழ் சட்டக் களஞ்சியம், தமிழ் சட்ட சொற்கள் உள்ளிட்ட அனைத்தும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டால்தான் தமிழ் மொழி வழக்காடு மொழியாக கொண்டு வர முடியும், இங்குள்ள மொழிபெயர்ப்பாளர்கள் அந்தப் பணியை விரைந்து செய்திட அரசு துரிதப் படுத்த வேண்டும்

இவ்வாறு அவர் பேசினார்.

---

### கழக துணைப் பொதுச் செயலாளர் இ.பெரியசாமி சிறப்புரை:

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் அறிவிப்பு!

திண்டுக்கல், செப். 5-

திண்டுக்கல் மேற்கு மற்றும் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் குறித்து திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-





திண்டுக்கல் வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (5.9.2026 - சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையிலும் தலைமைக் கழக பிரதிநிதிகள் செல்வம் எம்.பி. மற்றும் பிரபு கஜேந்திரன் ஆகியோரின் முன்னிலையிலும், திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:**

1. சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி மாநகர, நகர, ஒன்றிய பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு சம்பந்தமாக.
2. செப். - 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக முப்பெரும் விழா
3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

---

### வேம்பாரில் மழை வெள்ளத்தால் சேதமடைந்த

# மீன்பிடி இறங்கு தளம் சீரமைப்புப் பணியை துரிதப்படுத்த வேண்டும்!

## சட்டப்பேரவையில் ஜீ.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

சென்னை, செப்.5 -

வேம்பாரில் மழைவெள்ளத்தால் சேதம் அடைந்த மீன்பிடி இறங்கு தளம் பாலத்தை சீரமைக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும் என சட்டப்பேரவையில் ஜீ.வி. மார்க்கண்டேயன் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் நடந்த மானிய கோரிக்கை மீதான கேள்வி நேரத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் விளாத்திகுளம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஜீ.வி. மார்க்கண்டேயன் பேசியதாவது:-



விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் வைப்பாறு கடலில் கலக்கின்ற இடத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் மீன்பிடி இறங்கு தளம் 'ப' வடிவ பாலம் முற்றிலும் சேதம் அடைந்ததை கடந்த ஆட்சியில் சட்டமன்றத்தில் நான் எடுத்துக் கூறியதை தொடர்ந்து மீன்பிடி இறங்கு தளம் மற்றும் வடிவ பாலத்தை சீரமைக்க அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூபாய் 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார். இந்த சீர் அமைப்பு பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டதை தொடர்ந்து கடந்த பிப்ரவரி மாதம் பணி துவங்கிய போதும் தற்போது வரை இப்பணியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. நவம்பர் மாதம் அதிக மழை பெய்தால் கூடுதல் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் மேலும் பல கோடிகள் செலவு செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும். எனவே மீன் வளத்துறை அமைச்சர் விளாத்திகுளம் தொகுதிக்கு வருகை தந்து நேரடியாக ஆய்வு செய்து இந்த பணியை விரைவாக முடித்து பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.